நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2014

தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு
Level : Intermediate - Lower

June 2014

வினாக்கள் : 50
வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

For questions 1 to 5 - choose the word that fill in the blanks and complete the sentence meaningfully.

**1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு இடைவெளியை நிரப்ப பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க :-

1. ____________ வணக்கம் மனதிற்கு அமைதி அளிக்கிறது.
   (a) இறை
   (b) இரை
   (a) இலை

2. மாதவி நடனக் ____________ விளங்கினாள்
   (a) கலையில்
   (b) களையில்
   (c) கழையில்

3. மல்லிகை நறு ____________ வீசும் மலர்களுள் சிறந்தது.
   (a) மனம்
   (b) மணம்
   (c) மநம்

4. நமது தாய்மொளியாகிய தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது.
   (a) தொன்மை
   (b) தாய்மொளியாகிய
   (c) தமிழ்மொழி
   (d) வாய்ந்தது

5. இரு நண்பர்கள் பேருந்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது அழகிய புல்வெழிகளைக் கண்டு மகிழ்ந்தனர்.
   (a) மகிழ்ந்தனர்
   (b) அழகிய
   (c) புல்வெழி
   (d) நண்பர்கள்

For questions 6 to 10 - choose the odd word out of the four.

**6 முதல் 10 வரையுள்ள வினாக்கள் : வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

6. (a) வழிப்போக்கன் (b) கலைஞன் (c) ஓவியன் (d) தச்சன்
7. (a) காலை (b) வெயில் (c) பகல் (d) மாலை
8. (a) ராகம் (b) தாளம் (c) மேடை (d) பாட்டு
9. (a) வெள்ளி (b) தங்கம் (c) செம்பு (d) ரப்பர்
10. (a) மயில் (b) புறா (c) கிளி (d) குரங்கு

For questions 11 to 15 choose the correct word and complete the sentence.

**11 முதல் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. கவிதைகளை இயற்றுபவர் _______
    (a) குயவர்
    (b) ஆடலாசிரியன்
    (c) கவிஞர்
    (d) நடிகர்

12. உருவச்சிலைகளை வடிப்பவர் _______
    (a) தச்சர்
    (b) ஆசிரியர்
    (c) சிற்பி
    (d) இயக்குனர்

13. பறவைகள் கூட்டை விட்டு _______
    (a) பறந்தது
    (b) பறந்தன
    (c) பறந்தனர்
    (d) பறந்தேன்

14. நேற்று நடந்த கலைவிழாவுக்கு _______ வந்தீர்களா?
    (a) நீ
    (b) அவர்கள்
    (c) நீர்
    (d) நீங்கள்

15. நாமெல்லோரும் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் _______

(a) பங்குபற்றினேன்
(b) பங்குபற்றினார்கள்
(c) பங்கு பற்றினோம்
(d) பங்கு பற்றவில்லை

For questions 16 to 20 choose the word that has meaning opposite to the underlined word.

**16 முதல் 20 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு எதிர் கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.**

16. அவர்கள் நல்ல எண்ணத்தோடு பழகினார்கள்.

(a) கெட்ட
(b) அன்பு
(c) பெரிய

17. நான் பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றேன்.

(a) திட்டம்
(b) தோல்வி
(c) உறுதி

18. தங்கை வெயிலுக்கு குடை பிடித்தாள்

(a) மாலைக்கு
(b) மழைக்கு
(c) பகலிற்கு

19. ஆசிரியர் என்னிடம் கேள்வி கேட்டார்.

(a) பதில்
(b) விடை
(c) வினா

20. சுத்தம் சுகம் தரும்.

(a) நறுமணம்
(b) அசுத்தம்
(c) துர்நாற்றம்

For questions 21 to 25 choose the word that is plural to the underlined word.

**21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லின் பன்மை சொல்லை தெரிவு செய்க:**

21. குமரன் கல் எறிந்தான்
    - (a) கல்கல்
    - (b) கற்கள்

22. அம்மா வீட்டுக் கதவை மூடினார்
    - (a) கதவுகளை
    - (b) கதவுகள்

23. தச்சன் தளபாடம் செய்தான்
    - (a) தளபாடம்கள்
    - (b) தளபாடங்கள்

24. புத்தக சாலையில் புத்தகம் எடுத்தேன்
    - (a) புத்தகம்கள்
    - (b) புத்தகங்கள்

25. மாணவன் கட்டுரை எழுதினான்
    - (a) கட்டுரைகள்
    - (b) கட்டுரைக்கள்

For question 26 to 30 choose the words that are arranged in the best way to form a meaningful statement.

**26 முதல் 30 வரையான வினாக்களுக்கு கருத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க.**

26. (a) அழையுங்கள் வீடு என்னை திரும்பியதும்
    (b) வீடு என்னை திரும்பியதும் அழையுங்கள்
    (c) திரும்பியதும் வீடு என்னை அழையுங்கள்
    (d) வீடு திரும்பியதும் என்னை அழையுங்கள்

27. (a) உண்டு யானைக்கு தும்பிக்கை நீண்ட
    (b) யானைக்கு நீண்ட தும்பிக்கை உண்டு
    (c) தும்பிக்கை யானைக்கு உண்டு நீண்ட
    (d) நீண்ட உண்டு தும்பிக்கை யானைக்கு

28. (a) உடலுக்கு செய்வது நல்லது உடற்பயிற்சி
(b) நல்லது செய்வது உடற்பயிற்சி உடலுக்கு
(c) உடலுக்கு உடற்பயிற்சி செய்வது நல்லது
(d) உடற்பயிற்சி உடலுக்கு செய்வது நல்லது

29. (a) கதைகள் நல்ல கேட்கலாம் தாத்தாவிடம்
(b) தாத்தாவிடம் கதைகள் கேட்கலாம் நல்ல
(c) நல்ல கேட்கலாம் கதைகள் தாத்தாவிடம்
(d) தாத்தாவிடம் நல்ல கதைகள் கேட்கலாம்

30. (a) தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
(b) தெய்வம் ஒன்று நினைக்கும் தான் ஒன்று நினைக்கத்
(c) ஒன்று நினைக்கத் தெய்வம் தான் ஒன்று நினைக்கும்.
(d) தான் ஒன்று நினைக்கும் நினைக்கத் தெய்வம் ஒன்று

Read the text below and answer the questions 31 to 35.

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து, 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதி மறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
ஒப்பற்ற ஆசான் சொல் கேட்க வேண்டும
ஆதியிலே வாழ்ந்த முறை நினைக்க வேண்டும்
ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்
சுகம்பெறவே வாயாற வாழ்த்த வேண்டும்.

31. எவ்வாறு உண்மை பேச வேண்டும்?
(a) வாயால்
(b) நெஞ்சார
(c) நுனிநாக்கால்
(d) பொய்யாக

32. யாரை மதிக்க வேண்டும்?
(a) கற்றவரை
(b) உயரமானவரை
(c) உற்றவர்களை
(d) பணமுள்ளவரை

33. ‘ஆசிரியர்’ என்னும் பொருள் தரும் சொல்லை பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

(a) ஆசான்

(b) உயர்ந்தவர்

(c) உற்றவர்

(d) சோதிவடிவானவன்

34. ஆதி என்பதற்கு _________ என்பது பொருள்.

(a) கடைசி

(b) ஆரம்பம்

(c) நடுவில்

(d) முடிவு

35. யாருக்கு உதவ வேண்டும் என்று இப்பாடல் சொல்கிறது?

(a) உறவினர்

(b) எல்லோருக்கும்

(c) ஆபத்தில் இருப்பவருக்கு

(d) ஏழைகளுக்கு

Read the text below and answer the questions 36 to 40.

**பின்வரும் பந்தியை வாசித்து அதிலிருந்து 36 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

### -மனிதன் என்ற அற்புதம்-

நம்மை திகைப்பில் ஆழ்த்தும் ஏராளமான விஷயங்கள் பூமியில் நிறைந்துள்ளன. அவற்றில் ஒன்று தான் நம் மூளை. மனிதனை மற்ற எந்த மிருகத்திலிருந்தும் வெகுவாக வேறுபடுத்தி காட்டுவது அவனுடைய மூளையே. சுமார் இரண்டு கோடி புத்தகங்களை நிரப்ப போதுமான தகவலை மனித மூளையால் சுமக்க முடியும் என்று ஒரு விஞ்ஞானி குறிப்பிட்டார்.

அத்துடன் கற்றுக்கொள்ள உதவும் அநேக திறமைகள் மூளைக்குள் புதைந்து கிடக்கின்றன. ஆனால் கல்வி அங்கு கிடைப்பதில்லை. ஆகவே மூளைக்குள் இருக்கும் இயல்பான திறமையானது, புத்திக் கூர்மையை வளர்த்துக்கொள்ள நமக்கு உதவுகிறது. அதனால் நாம் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகிறோம்.

36. மனித மூளையால் எவ்வளவு தகவலை சுமக்க முடியும்?

(a) ஒரு வீட்டின் அளவு

(b) கடலின் அளவு

(c) இரண்டு கோடி புத்தகங்களை நிரப்ப போதுமான அளவு

37. இப்பந்தி எதைப்பற்றி கூறுகிறது?
   (a) அறிவுத்திறன்
   (b) மனிதன்
   (c) மூளை

38. மகிழ்ச்சி என்பது?
   (a) சந்தோஷம்
   (b) விருப்பு
   (c) கவலை

39. விஞ்ஞானி என்பவர் ஓர்
   (a) ஆசிரியர்
   (b) ஆட்சியாளர்
   (c) ஆராய்ச்சியாளர்

40. மூளைக்குள் இருப்பது
   (a) திறமை
   (b) புத்திக்கூர்மை
   (c) கல்வி

For questions 41 to 45 choose correct answer.

**41 முதல் 45 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத்தெரிவு செய்க.**

41. அகிம்சை வழியில் போராடியவர் யார்?
   (a) திருவள்ளுவர்
   (b) காந்தியடிகள்
   (c) பாரதி

42. ஔவையார் எழுதிய நூல் எது?
   (a) திருக்குறள்
   (b) இராமாயணம்
   (c) மூதுரை

43. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" - இது ஒரு
   (a) பாடல்
   (b) பழமொழி
   (c) திருக்குறள்

44. இராமாயணத்தை முதன் முதலில் எழுதியவர்?
   (a) கம்பர்
   (b) வால்மீகி
   (c) இதில் எதுவும் இல்லை

45. திருக்குறளில் மொத்தம் எத்தனை அதிகாரங்கள்?

(a) 133

(b) 1330

(c) 10

For questions 46 to 50 write a sentecne with minimum three words on the answer sheet about their action.

**46 முதல் 50 வரையுள்ள வினாக்களுக்கு, படத்தில் உள்ளவர்கள் என்ன செய்கிறார் என்பதை 3 சொற்களுக்குக் குறையா வசனத்தில் விடைத்தாளில் எழுதவம்.**

46




47




48



49



50



நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2014